செ.வெ.எண்: 64/ஜீ்ன் /2019 நாள்:18.06.2019

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் விவசாயிகள் காரீப் பருவத்தில் பயிர் செய்துள்ள நெல், துவரை, நிலக்கடலை, பருத்தி, சோளம் மற்றும் கம்பு, பயிர்களுக்கு பிரதம மந்தரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் காப்பீடு செய்து பயன் பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு.இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

---

விவசாயிகள் காரீப் பருவத்தில் பயிர் செய்துள்ள நெல், துவரை, நிலக்கடலை, பருத்தி, சோளம் மற்றும் கம்பு, பயிர்களுக்கு பிரதம மந்தரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்ந்து பயன் அடைய வேண்டும்.

இது குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பிரதம மந்திரியின் பயிர்க் காப்பீட்டுத் திட்டமானது விவசாயிகளுக்கு எதிர்பாராமல் ஏற்படும் இழப்பீடுகளுக்கு நிதியுதவி வழங்கி பாதுகாக்கவும், பண்ணை வருவாயை நிலைப்படுத்தவும் மற்றும் அதி நவீன தொழில் நுட்பங்களை கடைபிடிப்பதை ஊக்குவித்து வருகிறது.

2019-20 ஆம் ஆண்டில் காரீப் பருவத்தில் பயிர் காப்பீடு செய்ய அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் காரீப் பருவ பயிர்களான நெல் பயிருக்கு ஏக்கருக்கு விவசாயிகள் கட்ட வேண்டிய பிரிமியத் தொகை ரூ.650/- பயிர் காப்பீடு செய்ய கடைசி நாள் 31.08.2019 ஆகும். துவரை பயிருக்கு ஏக்கருக்கு ரூ.315/- பிரிமியத் தொகை செலுத்த கடைசி நாள் 30.09.2019, நிலக்கடலை பயிருக்கு ஏக்கருக்கு பிரிமியத் தொகை ரூ.520/- செலுத்த கடைசி நாள் 30.09.2019. பருத்தி பயிருக்கு ஏக்கருக்கு பிரிமியத் தொகை ரூ.1365/- செலுத்த கடைசி நாள் 31.08.2019. பிர்கா பயிர்களான சோளம் பயிருக்கு பிரிமியத் தொகை ரூ.206/- செலுத்த கடைசி நாள் 30.09.2019. கம்பு பயிருக்கு ஏக்கருக்கு பிரிமியத் தொகை ரூ.182/- செலுத்த கடைசி நாள் 30.09.2019.

பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் கடன் பெறும் விவசாயிகள் அவர்கள் கடன்பெறும் வங்கிகளில் கட்டாயமாக பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள்.

கடன் பெறாத விவசாயிகள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள பொது சேவை மையங்கள் மூலமாகவோ, வங்கிகள், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவோ, விருப்பத்தின் பேரில் பதிவு செய்து கொள்ளலாம்.

விவசாயிகள் இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யும்போது முன் மொழிவு விண்ணப்பம், பதிவு விண்ணப்பம், கிராம நிர்வாக அலுவலர் வழங்கும் அடங்கல், கம்ப்யூட்டர் சிட்டா, வங்கி கணக்கு புத்தகத்தின் முதல் பக்க நகல், ஆதார் அட்டை நகல் ஆகியவற்றுடன் பயிர் காப்பீடு செய்வதற்கான தொகையை செலுத்தி அதற்கான ரசீதை பெற்றுக் கொள்ளலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயிகள் அனைவரும் பிரதம மந்திரியின் பயிர் காப்பீடு திட்டத்தில் சேர்ந்து பயன்பெறுமாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

செய்தி வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி.